1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தை நகரியமாக மாற்றுவதற்கு பல்வேறு அடிப்படை தேவைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆண்டு வருமானத்தையும் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தொகையையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற ஊராட்சியிலே ஆண்டு வருமானம் 91 ஆயிரம் ரூபாய் என்பதும் அதனுடைய மக்கள் தொகை சுமார் 500 என்ற காரணத்தினாலே அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலமாக இருக்கிற காரணத்தாலே ஆண்டு வருமானம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. அங்கு வருவாய்த் துறை மூலமாக வருகிற நிதியினுடைய கணக்கைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கு ஊராட்சி ஒன்றியம் மூலமாக வருகிற வருவாயை கணக்கிட்டு, அங்குள்ள மக்கள் தொகையை கணக்கில் எடுக்காமல் அங்கு வருகிற லட்சக் கணக்கான சுற்றுலா பயணிகளை கணக்கில் கொண்டு, வரும் ஆண்டிலாவது அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 486, திரு. சிங்கை கோவிந்தராசு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

486—

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கவுன்சில் ஹால் கட்டுதல்.

*3732—திரு. சிங்கை கோவிந்தராசு:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கவுன்சில் ஹால் புதியதாக கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக கவுன்சில் ஹால் கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-05

திரு. சிங்கை கோவிந்தராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வருகின்ற கூட்டுறவுத் தேர்தல் முடிந்ததற்குப் பின்னாலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாநகராட்சி வளாகத்திலே கௌன்சில் ஹால் இல்லை என்பதை மனதிலே கொண்டு கட்டித்தர இனிமேலாவது அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நகராட்சி நூற்றாண்டு விழாக் கட்டிடம் ஒன்று முதல் மாடியில் கட்டப்பட்டிருக்கிறது. இதில் இரண்டாவது மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்றதாக உள்ளது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், உள்ளாட்சி தேர்தல் பற்றி இந்த மாமன்றத்தில் ஏற்கனவே தெளிவாக தெரிவித்திருக்கின்ற காரணதினாலே விரைவில் உள்ளாட்சி தேர்தல்கள் வர இருக்கின்ற சூழ்நிலையில் தற்பொழுது நூற்றாண்டு விழா கட்டிடத்திலேயே இரண்டாவது மாடியில் மாநகராட்சி கவுன்சில் ஹால் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம் என்பது மாநகராட்சியாகி 10 ஆண்டுகள் ஆகின்றன. அதன் சுற்று வட்டாரங்களில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. சென்னைக்கு அடுத்தபடி கோவையில் தான் இப்போது மக்கள் தொகை பெருகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, மக்கள் தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் மாநகராட்சியாகி 10 ஆண்டுகள் ஆகின்றன என்ற காரணத்தினாலும். மதுரைக்கு எப்படி தனியாக மாநகராட்சிக் கட்டிடம் இருக்கின்றதோ அதைப்போல கோவைக்கும் தனியாக மாநகராட்சிக் கட்டிடம் பெரிய அளவில் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டு விழா மாடிக் கட்டிடத்திலேயே இரண்டாவது மாடி கட்டி அதிலே மாநகராட்சியின் கவுன்சில் ஹால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சிங்கை கோவிந்தராசு : பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே இப்படி ஒரு புதிய கட்டிடம் மாநகராட்சிக்கு கட்டுவதற்கும் அதற்குண்டான கருத்துரு செயல்பாடுகளும் ஏற்பாடாகி இருந்தது. கோவை மாநகராட்சி நூற்றாண்டு வளாகம் தற்போதைய நிலையில் அலுவலகங்களாக மாற்றப்பட்டு அங்கே அரசு மாநகராட்சி அலுவல்கள் செயல்பட்டு வருகின்றன அது மிகவும் குறைந்த வளாகமாக இருக்கின்ற காரணத்தினாலும் முன்னேறி வருகின்ற கோவை மாவட்டத்தினுடைய மிகப் பெரிய வளர்ச்சிக்கு அந்த கவுன்சில் ஹால் இடம் தராது என்பதையும் மனதிலே கொண்டு புதிதாக கட்டுவதற்கு ஏற்கனவே புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே இருந்த செயற் குறிப்பு இப்போது நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள சூழ்நிலையில் இரண்டாவது மாடிக் கட்டிடத்திலேயே கவுன்சில் ஹால் கட்டுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்ற காரணத்தினாலே தனியாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆலோசிக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி நகர சபையாக இருக்கின்றபோது 35 உறுப்பினர்கள் கொண்ட நகரசபையாக இருந்தது. அப்போது அந்த நகர மன்றம் கூட்டம் நடக்கின்ற ஹால் சிறியதாக இருந்தது. அந்த அறையில் கூட்டம் நடத்தப்பட்டு வந்தது. இப்போது 72 டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டு 72 பேர்கள் கவுன்சிலர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது அந்த அறை போதாது. இப்போது அறையையும் அலுவலகமாக மாற்றிவிட்டார்கள். இருக்கின்ற கட்டிடமும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடம். ஆதலால் புதியதாக மாநகராட்சி அலுவல்கள் சிறப்பாக நடைபெறவும், கவுன்சில் சிறப்பாக நடைபெறவும் வருகின்ற தேர்தலுக்குள் கட்டிடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே முடிவு எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி அலுவலக வளாகத்தில் இருக்கின்ற நகராட்சி நூற்றாண்டு விழா கட்டிடத்தின் இரண்டாவது மாடியிலே கவுன்சில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். புதிய கட்டிடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக வேறு ஒரு இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 543 டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உணவு மற்றம் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

543—

அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்திலிருந்து மிளகாயை நீக்குதல்.

*477—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்திலிருந்து மிளகாயை நீக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

அத்தியாவசியப் பண்டச் சட்டத்தில் இருந்து மிளகாயை நீக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் 1955 ஆம் ஆண்டின் 10வது சட்டமான 1955 ஆம் ஆண்டைய இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வகுக்கப்பட்ட 1984 ஆம் ஆண்டைய தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வர்த்தகம் முறைப்படுத்தல்) ஆணையில், வணிகம் செய்வதற்கு உரிமம் பெறவேண்டி இன்றியமையாப் பண்டங்கள் அட்டவணை I-ல் இருந்து மிளகாயை (வற்றல்) நீக்கி உரிமம் பெறத் தேவையில்லாப் பண்டங்களின் அட்டவணை II-க்கு மிளகாயை (வற்றல்) மாற்றி அரசு ஆணை எண் (3D). 26, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்